RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s859

OPEN ACCESS

# இலங்கையில் காணப்படுகின்ற முகமூடிக் கலையின் தற்போதைய நிலைமை பற்றிய ஆய்வு

வே. ஹோகுலரமணன் [அ, *]

[அ] ஓவியத்துறை, ரவீந்திரபாரதி பல்கலைக்கழகம், கொல்கத்தா-700050, மேற்கு வங்கம், இந்தியா.

# A Review of the Current State of Mask Art in Sri Lanka

V. Gokularamanan [a, *]

[a] Department of Painting, Rabindra Bharati University, Kolkata-700050, West Bengal, India

* Corresponding Author: vramananart@gmail.com

Received: 22-04-2021
Revised: 07-06-2022
Accepted: 10-06-2022
Published: 20-08-2022

Check for updates

## ABSTRACT

Sri Lanka is a country with many artistic aspects. There are many other forms of art, like painting, dance, drama, palm leaf art, mask art, etc. Mask art has been regarded as a traditional art form by people from ancient times to the present. The arts generally bring joy and freshness to the mind. They are energetic. It is important to note that the art form is found in many places. Masks are found in two forms, i.e., art and craft. Art forms have new forms and crafts are the art of recreating the new forms created by the craft without changing the form. In addition, they are passionately involved in mask making as a profession and an art. More mask artists are found in the Ambalangoda area. In Ambalangoda, masks are found as an additional commodity for sale in the shops found on roadsides. It has been used by people in a variety of cases until now. The mask is also made by the artists as a decorative object. Many different forms are also created in the form of calmness, fear, and humor. They are also created to suit the needs of their people and are found with a variety of artistic features. The trees that belong to the mask art are selected and carved with the tools required for the engraving. They are also painted in an eye-catching way to look at. Certain types of paint are used. The use of colour plays an important role in mask art. Apart from color, it is a form of art that includes not only colour but also quantitative dimensions, organization, three-dimensionality, two-dimensionality, perfectionism, aesthetics, etc. The mask is created by the artists based on the above-mentioned details. This art form is found not only in Sri Lanka but also in many other countries. It is found in many places, like the State of Kerala, West Bengal, and India. It is also found in Indonesia. Mask art is also found in museums as an exhibit.

**Keywords:** Mask art, Sri Lanka, Crafts, Artistic

## முன்னுரை

இலங்கையில் காணப்படுகின்ற கலைகளில் முகமூடிகளையும் முக்கியமானதொன்றாகும். கலையானது 1800 ஆண்டு காலப்பகுதியில் தோன்றியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரம்பரியமான வடிவங்களில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை காணப்படுகின்றது (Hendry Julius, 2013). ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்ட இலங்கைக்கு உரிய முகமூடிகள் சில இலங்கையில் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இக் கலையானது இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றன. பல கலைஞர்களால் இன்றுவரை தொழில் நிமித்தம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழிலாக காணப்படுவதோடு அலங்கார கலையாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. வீடுகளின் சுவர்களை அலங்கரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. ஆரம்ப காலத்தில் பேய் ஓட்டுதல் நிகழ்வுகளுக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இன்னும் பல நிகழ்வுகளும் பயன்பாட்டில் உள்ளன. நகைச்சுவை, பேயோட்டுதல், அலங்காரப் பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலான மக்கள் நவீனத்தை நோக்கி சென்றதால் பாரம்பரியமான கலையானது அழிவடைந்து போகும் நிலையில் காணப்படுகின்றன. அழிவடையாமல் இருக்க வேண்டும் என்று நடவடிக்கைகளை எடுக்கும் போதும் அழிவடையாமல் காணப்படும். அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தும்போது முகமூடி வடிவங்கள் உருவாக்குதல் போன்ற போட்டிகள் நடத்தும் போதும் பயிற்சிப்பட்டறை நடத்தும் போதும் பல்கலைக் கழகங்களில் படங்களில் ஒன்றாக சேர்க்கும் போதும் நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் பண்புகள் மாறா வண்ணம் முகமூடியினை உருவாக்கும் போது கலையானது அறிவு அடையாமல் இலங்கையின் பாரம்பரியமான பொருளாக மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கும்.

## இலங்கையில் காணப்படுகின்ற முகமூடிக்கலையின் தற்போதய நிலைமை

உலகின் பல்வேறு நாடுகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் உணவு தேடலிலும், வியாதி நோய் நொடிகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் கிரியைகள் மேற்கொள்வதற்கும் வேட்டையாடி வாழ்ந்த மக்கள் விலங்குகளிலிருந்து சூதனமாக தப்பித்துக் கொள்வதற்கும் விலங்குகளை பீதியடைய செய்வதற்கும் வேட முகங்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். முகமூடியானது கலையாகவும் கைவினையாகவும் காணப்படுகின்றது. புதிய வடிவில் முகமூடி வடிவங்களை உருவாக்குகின்ற செயற்பாடு கலை ஆகும். அக்கலையினை மீள் பிரதி செய்யும் போது அவை கைவினையாக மாற்றம் பெறுகின்றது. கலை வடிவமானது மக்களிடையே அறிமுகமாகி வளர்ச்சியடைய தொடங்குகின்றது. இவ்வாறாகவே இலங்கையில் முகமூடிக் கலையானது ஆரம்பிக்கப்பட்டாலும் தனித்துவமான முகமூடிகளின் வரலாறு 1800 இருந்தே ஆரம்பிக்கப்படுட்டுள்ளன என ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது (Vadivel Inbamohan 2019).

பிற்காலத்தில் முதலில் நாட்டுப்புற கதைகளிலும் பிசாசு நடனங்களிலும் நடன, நாடக நிகழ்ச்சிகளிலும் இவற்றை பயன்படுத்தத் தொடங்கினார்கள். இந்தியாவிலுள்ள கேரளாவின் மலபார் நகரங்களில் காணப்படும் முகமூடி தயாரித்தல் மற்றும் பிசாசு நடனம் போன்ற மரபுகளின் செல்வாக்கினை இலங்கை மரபுகளிலும் காணக்கூடியதாக உள்ளன. முகமூடி கலை வடிவமானது ஆரம்பிக்கப்பட்டபோது காலனித்துவ காலங்களில் முகமூடிகளின் பயன்பாடானது மிகக் குறைவாக காணப்பட்டதால் பண்டைய சில முகமூடிகள் இலங்கையிலிருந்து ஐரோப்பாவிலுள்ள அருங்காட்சியகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பிற்பகுதிகளில் இக்கலைவடிவத்தில் ஆர்வம் ஏற்பட்டு பாரம்பரிய பொருளாக பார்க்கத் தொடங்கியமையினால் முகமூடிக் கலையானது வளர்ச்சியடையத் தொடங்கியதோடு, இக்காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்து பார்ப்பதற்கு கண்களைக் கவரும் வகையில் உருவாக்கத் தொடங்குகின்றார்கள் (Vadivel Inbamohan 2019). பாரம்பரிய முகமூடிக் கலையானது இனிவரும் காலங்களில் வளர்ந்து வரும் வணிகமாகும். அத்துடன் பல தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தருகின்ற கலையாகவும் காணப்படுகின்றன. உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகளை தொடர்ந்து வாதுகெதார, பெந்தாரா மற்றும் மேற்குக் கடற்கரையின் சில பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது.

எல்லா வகையான முகமூடிகள் தனித்துவமான வடிவத்திலிருந்து மாறாக தடிப்பான பெரிய வாய்ப்பகுதிகள், பெரிய கண்கள் சிறியளவிலும் பெரியளவிலுமான காதுகள் பார்ப்பதற்கு பயங்கரத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. அச்சுறுத்தும் பாணியில் அமையப்பெற்ற முகமூடிகள் கூர்மையான பற்களைக் கொண்டிருக்கும். முகமூடிகளானது பல வகைகளாக பல தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன,

1. ரரக்ஷா முகமூடி (Raksha Mask)

2. சன்னி முகமூடி (Sanni Mask)
3. கோலம் முகமூடி (Kolam Mask)
4. கருடா முகமூடி (Guruda Mask)
5. மகர முகமூடி (Makara Mask)
6. மகா கோல முகமூடி (Maha Kola Mask)

எனும் ஆறு வகைகளாக முகமூடிகள் காணப்படுவதோடு இவை பல பல வகைகளாக வித்தியாசமான முகத்தோற்றத்துடன் காணப்படுகின்றன.

## ரக்ஷா முகமூடி (Raksha Mask)

பண்டிகைகள் மற்றும் கலாச்சார நடனங்களில் இலங்கையர்கள் அதிகம் பயன்படுத்துவது ரக்ஷா முக மூடியாகும். ரக்ஷா என்றால் "பேய்" என்றும் முகமூடிகள் "அப்போட்ரோபாலிக் (Apotropaic)" என்றும் அதாவது தீமையை தடுக்கும் நோக்கம் கொண்டது என்றும் பொருள். தடிப்பான வர்ணங்களில் பூசப்படுவதோடு அவற்றின் வீங்கிய கண்கள் மற்றும் நீளமான நாக்குகளுடன்கூடிய தோற்றம்பல்வேறு வகையான பேய்களை சித்தரிக்கின்றன. ரக்ஷா முகமூடிகள் நடன சடங்குகளிலும் இடம்பெறுகின்றன. அத்தோடு வீடுகளில் உள்ள தீய சக்திகளை தடுக்கவும் பயன்படுத்தப்படும் 24 தனிப்பட்ட முகமூடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் சில வடிவங்கள் மட்டுமே காணப்படுகின்றன. பிறிட்டி மாஸ்க், ரற்றோ மாஸ்க் (Tattoo Mask), நாகமாஸ்க் (Naga Mask), மையூரா மாஸ்க் (Myura Mask), காறா மாஸ்க் (Gara Mask), குருளு மாஸ்க் (Gurulu Mask), மாறு மாஸ்க் (Maru Mask), ஜீனி மாஸ்க் (Gini Mask), கருப்பு மற்றும் வெள்ளை மாஸ்க் (Black And Wite Mask) போன்ற சில வடிவங்கள் மட்டுமே காணக்கூடியதாக உள்ளது (Kumarangitunga Pradeep, (2021) Informer, Age 37, Matara, Sri Lanka).

சில ரக்ஷா மாஸ்கின் தன்மைப்பற்றி பார்ப்போமேயானால், ஜீனி (gini mask) மாஸ்கானது தீமையை தடுப்பதே அதன் வேலை. இந்த முகமூடி உணர்ச்சி கோபத்தைக் குறிக்கின்றது. அதனால்தான் சிவப்பு, செம்மஞ்சள் மற்றும் மஞ்சள் நிறங்களில் உள்ளன. காதிலுள்ள வடிவங்கள் எல்லா தீமைகளையும் விரட்டுகின்றன. காதுகள் மற்றும் முகத்தின் வடிவங்கள் உண்மையில் மக்களையும் நிறங்களையும் கொண்டுள்ளன. அத்துடன் கவர்ச்சிகரமான கூந்தல் அமைப்புடனும் காணப்படுகின்றன. உணவினை சாப்பிட பற்களும் காணப்படுகின்றன. மையூரா மாஸ்கானது அமைதியையும் நல்லிணக்கத்தையும் காட்டும் வகையிலும்பிரகாசமான அழகான வர்ணங்களாக வெள்ளை மற்றும் நீலம் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இம் முகமூடிகள் தீய சக்திகளையும் பேய்களையும் தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன.

## சன்னி முகமூடி (Sanni Mask)

சன்னி என்பது இறைவன் அரக்கனின் கீழ் கட்டுப்படுத்தப்படும் தீய சக்திகளால் ஏற்படும் குறிப்பிட்ட வியாதிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஒரே இரவில் இடம்பெறும் சடங்கு முறையாகும். தஹா அடா சன்னியா முகமூடிகள் இலங்கையில் பண்டைய நடன சடங்கின் முக்கியமான பொருளாக இருந்தன. இதனை பிசாசு நடனம் என்று கூறுகின்றனர். இந்த சடங்கு இலங்கையில் மிக நீண்ட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது. இந்தியாவின் பீகார் மாநிலத்தில் உள்ள பண்டைய நகரமான வைசாலியுடன் ஒத்துக் காணப்படுகின்றன. நாட்டின் தெற்கு, மேற்கு பகுதிகளில் பண்டைய மன்னர்களின் காலங்களில் சாந்தி கர்மயா என்ற ஆசீர்வாத விழாவின் ஒரு பகுதியாக தஹா அடா சன்னியா நடனம் இடம்பெறுகின்றன. தஹா அடா சன்னியா நடனம் விறுவிறுப்பானதும் துடிப்பானதும் மற்றும் வர்ணம் நிறைந்தது. ஆனால் கடந்த நூற்றாண்டில் மிகவும் அரிதாகவே வடிவமைக்கப்பட்டது.

காரணம் தளபாடங்கள் மற்றும் அதனை கொண்டு நடத்துவதற்கான செலவு கூடுதலாக இருந்ததால் குறிப்பிட்ட அளவிலான முகமூடிகள் உருவாக்கப்பட்டன.

நோய்களுக்கு காரணம் பிசாசுதான் என்று நம்பப்பட்டதால் மக்களை நோயிலிருந்து விடுவிப்பதற்காக பிசாசு நடனங்கள் நடத்தப்பட்டன. நோய்களை மருத்துவரினால் குணப்படுத்த முடியாமல் காணப்பட்டதால் நோய்களை விடுவிப்பதற்கு நோய்களின் வகைகளுக்கு ஏற்றவாறு முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. 18 வகையான நோய்களுக்கு 18 வகையான முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. பூட்டா - சிதைவு, விலகல் மற்றும் கைகால்களில் வளமின்மை.
2. ஜலா - வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு.
3. குல்மா - அடிவயிற்றின் வீக்கம் மற்றும் பசியின்மை.
4. கன - குருட்டுத்தன்மை.
5. கோரா - நொண்டி.
6. பிஹிரி - காது கேளாமை.
7. வட்டா - வாய்வு.
8. ஸ்லெஸ்மா - கபம் நோய்.
9. கோலா - நிமோனியா.
10. மரு - கண்களில் கவர் மற்றும் சிதைவுகள்.
11. அமுக்கு - சாய்ந்த தலை மற்றும் கைகளின் சோர்வு.
12. கோலு - ஊமை.
13. வேவுலம் - சாய்ந்த தலை மற்றும் கைகால்களின் சோர்வு.
14. கினி ஜலா - எரியும் உணர்வு, தலைவலி மற்றும் சோர்வு.
15. பிசுஅல்லது கபாலா - பைத்தியம் மற்றும் மயக்கம்.
16.தேமலா - உடலின் பைத்தியம் மற்றும் விலகல்.
17. நாகா - முகங்களின் வீக்கம் மற்றும் தோல்களை உரித்தல்.
18. தேவா - தொற்று நோய் மற்றும் தொற்று நோய்கள்.

எனும் 18 வகையான கன்னி மாஸ்கானது இலங்கையில் முத்திரைகளிலும் இடம் பெற்றுள்ளமையினால் தனக்கென ஒரு இடத்தினையும் பெற்றுள்ளன. சன்னி, மாஸ்கானது பெரிய பற்களையும் பாதிமுகம் முழுவதும் நாகபாம்பு வடிவிலும் கண்களை பிதுக்கிய நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளமை சனி முகமூடிகளுக்கு சிறப்பம்சங்களாக காணப்படுகின்றன. விறவுண், மெல்லிய மஞ்சள், கறுப்பு, சிவப்பு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டாலும் விறவுண் நிறத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன.

## கோலம் முகமூடி (Kolam Mask)

கோலம் முகமூடியானது மேற்கிலும் இலங்கையிலும் கரையோரப்பகுதிகளிலும் வேறு சில பிரதேசங்களிலும் பாரம்பரிய நாட்டுப்புற கலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. முகமூடியானது அரிய பலா விஜயசூரிய குடும்பம் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை பாரம்பரியமாக கோலம் நடனங்களை நடத்துகின்ற குழுக்களில் ஒன்றாகும். புராணங்களின் படி கோல முகமூடிகள் மனிதர்களின் முதல் மன்னர் மகாவம்ச காலத்திலிருந்து தோன்றின. உதாரணமாக இந்த ராஜாவின் ராணி கர்ப்பமாக

இருந்தார். முகமூடி நடனங்களைக் காண ஒரு வலுவான விருப்பத்தை அவள் உணர்ந்தாள் ஆனால் அதை எவ்வாறு செய்வது என்று யாருக்கும் தெரியாது. ராணி மேலும் மேலும் அவதிப்பட கடைசியாக சக்ரா அவளைப் பற்றி கவலைப்பட அத்தகைய நடனத்திற்கான முகமூடிகளையும் பாடல்களையும் வழங்கும்படி விஸ்வகர்மா (கைவினைஞர்களின் கடவுள்) கடவுளிடம் கேட்டார். அடுத்த நாள் காலையில் விஸ்வகர்மா கடவுள் வழங்கிய முகமூடிகள் மற்றும் வசனங்கள் அரச தோட்டத்தில் காணப்பட்டன. ராணியின் கிங்கின் மாஸ்களைக் கொண்டு நடனங்கள் நிகழ்த்தப்பட்ட பிறகு அவள் மகிழ்ச்சியடைந்தாள். பிறகு அவளுடைய கர்ப்ப ஆசைதான் மறைந்து விட்டன. என்று புராண கதைகளில் கூறப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரம்பரிய சிங்கள சமூதாயத்தில் வாழ்வின் அம்சங்களையும் சித்தரிக்கின்றன.

கோலம் முகமூடியில் பானிக்காலா, நொஞ்சிசுக்கா, ஹேவா, ஜசயா, லெஞ்சினா, முடில போன்ற கதாப்பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. முகமூடிகளின் வர்ணப்பாவனையானது ஆரம்ப காலங்களில் மெல்லிய விறவுண் (டு்பாவ டீசழறn), கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்கள் பயன்பாட்டிலிருந்து இன்று கண்களைக் கவரும் வகையில் (Bright colours) களாக மஞ்சள், வெள்ளை. கறுப்பு, பச்சை, கருநீலம், விறவுண் போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தாலும் பச்சை, மஞ்சள், விறவுண் வர்ணங்களுக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன.

இம் முகமூடிகள் சிறப்புத்தன்மை செய்வதற்காகக் காணப்படுகின்றன. அதாவது வாட் அமைப்பானது அகற்றவாயும் வுற பக்கம் சென்றமையும் பற்கள் வெளியே தெரியும் படியும் சில பற்கள் மாத்திரம் காணப்படுவது போலவும் கண்கள் வெளிவந்து பிதுங்கிய நிலையிலும் சிறிய கதையமைப்பினையும் கொண்டுள்ளன.

## கருடா முகமூடி (Guruda Mask)

நாட்டுப்புறக் கலைகளில் மிகவும் தனித்துவமான முகமூடி வகைகளில் ஒன்றாக கருதப்படும் கருடா முகமூடியானது இந்து புராணங்களிலும் ஆன்மீகத்திலும் சிறந்த வரலாற்றுப் பண்புகளையும் கொண்டுள்ளன. விஷ்ணுவின் வாகனமாக சூரியப்பறவையானது கோப்ரா பேயுடன் சண்டையிடுவதற்கும் போரிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தோற்றத்தில் விரிவான பறவையின் தலையமைப்பினையும் பயமுறுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. பறவையானது பல நாகப்பாம்புகளைக் கொலை செய்யக் கூடிய வல்லமையுடையது. அத்தோடு புனிதப் பறவையாகவும் பல வெற்றிகளுக்கு காரணமாகவும் காணப்படுகிறது. கிராமவாசிகளுக்கு பாம்பு கடித்தால் உடலில் ஏற்படும் விஷத்தன்மையினை அகற்றுவதற்காக முகமூடி அணிந்து நடனத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதாக கூறப்படுகிறன. கருடா முகமூடிகளுக்கு பச்சை, மஞ்சள், சிவப்பு போன்ற வர்ணங்கள் கூடுதலாக பயன்படுத்தப்படுகிறது. அர்ஜுனா வல்லமா முகமூடி (Arjuna - Vallabba Mask), வல்லினெஸ் கழுகு முகமூடி (Balines EagleMask), கருடா வல்லினெஸ் (Garuda Balines Mask), வல்லினெஸ் கழுகு முகமூடி (Balines Eagles Mask) போன்ற பல முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. கருடா முகமூடியானது இந்தியாவில் மாலாபிரதேசங்களில் இன்னும் பயன்பாட்டில் உள்ளதற்கான புகைப்படங்களும் காணப்படுகின்றன.

## மகர முகமூடி (Makara Mask)

கரவா இன மக்களின் மீனவர் சமூகத்தினை அடையாளப்படுத்துகின்ற முகமூடியாகும். பால்சா மரத்தில் செதுக்கப்பட்டுள்ளன. முகமூடியினை அணிந்து ஆடும் போது அதனை அசைப்பதற்காக ஒரு கம்பி வழிமுறைகளைப்பயன்படுத்தப்படுகின்றன. முகமூடியானது அகன்ற வாயினையும் கீழ் தாடை பற்கள் வெளியே தெரியும் வகையிலும் அதில் இரண்டு பற்கள் மாத்திரம் ஐந்து அங்குலம் வெளியாக வளைந்தபடி உள்ளன. தலைப்பகுதியில் மூன்று நாகங்களும் அதில் நடுவில் உள்ள நாகம் நேர் பார்வையினையும் மற்ற இரண்டு நாகங்கள் பக்கப்பார்வையினையும் கொண்டுள்ளன. இரண்டு பக்கங்களிலும் வட்ட வடிவில் அலங்கார வடிவமொன்று செதுக்கப்பட்டுள்ளன.

### மகா கோல முகமூடி (Maha Kola Mask)

டெவில் நடனம் தலைமை முகமூடியாக மகா கோலா முகமூடி நாட்டுப்புறக் கலை மற்றும் கன்னி பாரம்பரிய நடனத்திலும் இடம்பிடித்துள்ளன. அரக்கனை அழிப்பதன் மூலம் நோயாளியிடமிருந்து நோயினை விரட்டுவதாக பயன்படுத்தப்படுகின்றது. கலையானது நடன கலைஞர்களைக் கொண்டு இடம்பெறுகின்றன. முகமூடியானது ஒருவகையில் சிறிய மாற்றத்துடன் பல காணப்படுகின்றன.

இம்முகமூடியானது மற்றைய முகமூடிகளிலிருந்து சற்று வித்தியாசமானதாக் காணப்படுகின்றன. முகமூடியின் தலை மேல் பகுதியில் இன்னொரு தலையும் இரண்டு பக்கங்களிலும் ஒன்பது வகையான முகமூடிகள் வித்தியாசமான அமைப்புடைய முகங்களுடன் காணப்படுகின்றன. இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாகபாம்புகள் நேர் பார்வையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட ஆறு வகையான முகமூடிகளும் நடன முறைகளைப் பின்பற்றியே நிகழ்த்தப்படுகின்றன. இலங்கையில் பல விதமான நடனக் கலாச்சாரம் காணப்படுகின்றன. கிளாசிக்கள் நடனப் பாரம்பரியத்தை அடியொற்றிகண்டிய நடனம், தாழ்வான நடனம், மத்திய பகுதியின் நடனப் பாணிகள் என மூன்று வகையாகவும் அவைஇயக்கும் முறைகள், உடைகள், கருவிகள் தனித்துவமான சடங்குமுறை அடையாளங்களுடனும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒரு குழந்தையை கருத்தரிப்பதற்காகக் கருவைப் பாதுகாப்பதற்காக மலட்டுத் தன்மையுள்ள பெண்களை ஆசீர்வதிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சடங்கு முறையானது மூன்று நடைமுறையில் இடம்பெற்றாலும் மலைநாட்டுப் பாரம்பரியத்தில் “சுடவர யங் கங்காரி” என்ற முகமூடி நடனம் சேர்க்கப்படவில்லை. இவ்வாறு சில சில வேறுபாடுகளுடன் முகமூடியின் பயன்பாடு காணப்படுகின்றன. முகமூடிகள் பயன்படுத்தப்படாத நடன நிகழ்வுகளில் நடனக் கலைஞர்களின் முகம் ஒப்பனையுடன் இடம்பெறுகின்றன.

மக்களிடையே பல வகையான நோய்கள் காணப்படுகின்றன. அவற்றை தடுப்பதற்காக ஆண்டுதோறும் பரிந்துரைக்கப்படும் “காம் - மடுவா” அல்லது “டெவோல் - மடுவா” என்று சடங்கு முறையிலும் முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. “காதே யாகுமா” என்ற நடன நிகழ்வு விழாவினை நிறைவு செய்வதற்காக இறுதியில் நிகழ்த்தப்படும் நடனமாகும்.

நாட்டுப்புறக் கதைகளின் படி இந்த பிசாசு “தல குமாரா” என்று அழைக்கப்படுகின்றது. ஒரு துயர மரணத்திற்குப் பிறகு கோபத்துடனும் துக்கத்துடனும் மறுபிறவியினை 12 வடிவங்களாக எடுத்துள்ளார் என்றும் தற்போது வண்ணமயமான முகமூடியுடன் ஒரு ஜோடி மங்கையர்கள் கொண்டு வாயின் இரண்டு மூலைகளிலும் நிகழ்த்தப்படுகின்றன. வரட்சி மற்றும் தொற்று நோய்கள் அல்லது பஞ்சங்களால் ஏற்படும் பருவகால ஆபத்துக்களின் போது நடனத்தை நிகழ்த்தும் போது தெய்வங்களின் ஆசீர்வாதங்களையும் செழிப்பையும் செல்வத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என்று கூறுகின்றனர்.

நிகழ்வுகள் அனைத்தும் பாரம்பரிய சடங்கு முறைகளுக்கேற்ப வாழைத்தண்டுகள், மென்மையான தேங்காய், மாவிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பச்சை இலைகளால் அலங்கரிக்கப்பட்டு விசேடமாக கட்டப்பட்ட சடங்கு தளத்தில் செய்யப்படுகின்ற இம் முறைகள் அனைத்தும் கிராமப்புறங்களிலும் இடம்பெறுகின்றன. காரணம் அங்கு வசிக்கும் மக்கள் பாரம்பரிய நிகழ்வுகளை நம்புகின்றனர். இதற்காக பல பெறுமதியான ஆடைகள், பூக்கள் மற்றும் எந்திரங்கள், என கூடுதலாக பணத்தையும் செலவிடுகின்றனர். ஆனால் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் நிகழ்வினை அவநம்பிக்கையாக பார்க்கின்றார்கள். காரணம் அவர்களுடைய வாழ்க்கையானது நவீன முறையினை நோக்கி நகர்வதனாலும் வெளிநாட்டு மருந்துகளை நம்புவதனாலாகும். அத்தோடு முகமூடி பாரம்பரிய கலை நிகழ்வினை பொழுதுபோக்கு சாதனமாகப் பார்க்கின்ற நிலைதான் தற்போது காணப்படுகின்றன.

முகமூடிகளானது நகைச்சுவைத் தன்மையை ஏற்படுத்துவதற்காக இந்து ஆலயங்களில் இடம்பெறுகின்ற வருடாந்த விழாக்களில் இடம் பெறுகின்ற ஊர்வலங்களில்இடம்பெறுவதால் இதனை பார்த்த அருகில் உள்ள கிராமங்களில் இதேபோன்ற நிகழ்வினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதோடு இச்

செயற்பாடானது பல கிராமங்களிலும் இடம் பெறுவதனால் இக் கலையானது விரிவடைந்து செல்வதோடு கலைஞர்களுக்குரிய மதிப்பும் கூடிக்கொண்டே செல்கின்றன. கூடுதலாக நிகழ்வினை பார்ப்பதற்கு சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அலை போல் குவிந்து காணப்படுகின்றமையினை காணலாம் (Nama lBandara, (2021) Informer, Age 31, Colombo, Sri Lanka).

கிராமப்புறங்களில் இடம்பெறுகின்ற முகமூடி கலைகளில் சில கலைஞர்களினால் நிகழ்த்தப்படுகின்ற கலையானது போலி தன்மையுடையதைக் காணலாம். நோயை குணப்படுத்த முடியும் என்ற ஆசை வார்த்தைகளைக் கூறி மயக்கிய பின்னர் போலியான முகமூடி நடனத்தினை அரங்கேற்றி மக்களிடம் இருக்கும் பணத்தினைப் பெற்றுக் கொள்வதே இவர்களுடைய தொழிலாகக் காணப்படுகின்றன. இவ்வாறான கலைஞர்கள் போலியான கலையை தொழிலாக வைத்துள்ளனர். ஆனால் மக்களிடையே நோயானது குணமடையாமல் காணப்படுவதோடு, மக்களிடையே காணப்படுகின்ற பாரம்பரிய நம்பிக்கையானது மெல்ல மெல்ல குறைந்து கலை மீது வெறுப்பு தன்மையும் ஏற்படுவதோடு கூடுதலான பணத்தை பறிகொடுத்து நடுவீதியில் நிற்கின்ற நிலையினை காணலாம்.

இவ்வாறான தவறான செயற்பாட்டின் மூலம் நோய் குணமடைய செய்யும் கலைஞர்களின் மீதும் நம்பிக்கையற்ற தன்மையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி சென்று விடுகின்றனர். காரணம் மக்கள் உரிய கலைஞர்களை சென்றடையாமல் அத்தோடு ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகின்றமையினால் மக்களிடையே இக்கலையானது குறைவடைந்து செல்கின்றன நிலையினைத் தற்போது காணலாம்.

வண்ணமயமான தலை சிறந்த படைப்புகளை உருவாக்க பயன்படுத்தப்படும் மரங்கள் செதுக்கல்களுக்கு ஏற்றவாறு காணப்பட வேண்டும். சில வகையான மரங்களில் மாத்திரமே செதுக்க முடியும். பாரமற்றவையாக இருக்க வேண்டும். தலையில் வைத்து நடனம் ஆடுவதற்கு இலகுவாக இருக்கும். மரத்தை வெட்டும் போதும் செதுக்கும் போதும் துளையிடும் போதும் பிளவுகள் வெடிப்புகள் ஏற்படாத வண்ணம் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் போது தான் முகமூடியானது முழுமை பெற்று கலையாக வெளிப்படும். இதற்காக கடல்மாங்கை, கோடாகதுறு, ஏழிலைப்பாலை, வெல்கதுறு, முள்முருங்கை, வேம்பு, பலா, எருமடு மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. புராதனக் கதைகளில் சந்தன மரத்தினால் செதுக்கப்பட்ட முகமூடிகள் கோலம், நடனம் ஆடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றன. தற்போது மரம் பயன்பாட்டில் காணப்படவில்லை. காரணம் பாரம் கூடியதாகவும், விலைமதிப்பு கூடியதாகவும், அரிய வகை மரங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டதாலும் செதுக்குவதற்கு கடினம் என்பதாலும் தற்போது செதுக்கப்படுவதில்லை. பண்டைய காலங்களில் “திங்” என்ற மரத்தினையும் பயன்படுத்தி இருந்தார்கள். மரத்தின் பாவனை மிகக்குறுகிய காலம் என்பதால் மரத்தினால் உருவாக்கப்பட்ட முகமூடிகள் குறைந்தளவிலாகக் காணப்பட்டன. பின்னர் வேறு மரங்களை தெரிவு செய்வதற்கும் இதுவே காரணமாகின.

மரங்கள் அனைத்தும் வயல்வெளிகளிலும் சதுப்பு நிலங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. முகமூடிகள் தயார் செய்ய மரத்தை வெட்டுவதற்கு முன்னர் சில சம்பிரதாயங்கள் காணப்பட்டன. மரத்தினை வெட்டும்போது நல்ல நேரம் பார்த்து, கலைகளுக்கு அதிபதியான விஸ்வகர்மா கடவுளை வணங்கிய பின்னர் தான் வெட்டுவார்கள். இதற்கு காரணம் ஜாதகங்களின்படி மரங்களில் கடவுள் இருப்பதாக நம்புவதுடன், கடவுளை வெட்டப்படும் மரத்திலிருந்து வேறு இடங்களுக்கு செல்லும்படி கூறி அதற்கு பூஜைகளை நடத்தி அதன் பிறகு மரத்தினை வெட்டுவார்கள். முகமூடிக்கு கதறு மரத்தினைப் பயன்படுத்துகின்றனர்.

இம்மரத்தின் பட்டையானது பால் தன்மை கொண்டதாக இருப்பதனால் பட்டையை அகற்றிய பின்னர் காற்றில் இதமான வெயிலில் உலர வைக்கப்படும். பின்னர் தேவைக்கு ஏற்ப வெட்டி எடுக்கப்பட்டு முகமூடிகள் செதுக்குவதற்கு பயன்படுத்தப்படும். அளவீடுகள் பழங்கால ஓலைச்சுவடிகளில் இருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றன. அத்தோடு சாரிபுத்திர (பிம்பமானிய),

ரூபாவளி மயமாதம் போன்ற நூல்களிலும் இருந்து தகவல்களை பெற்றுக்கொண்டு முகமூடிகளை உருவாக்கியுள்ளனர்.

முகமூடிகளை உருவாக்கும் போது பல முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்படுகின்றன. முகமூடிக்கு தேவையான மரத்தினை தெரிவு செய்து அளவிற்கேற்ப கூடுதலாக நீள்சதுர வடிவில் மரம் வெட்டப்படும். அதன் பிற்பாடு தலைப்பகுதியினை செங்குத்தாக இரண்டாக பிரிக்கப்படும். கிடைப்பாடாக நான்காகப் பிரிக்கப்பட்டு முதல் பகுதி தலைமுடி பகுதியாகவும் இரண்டாவது பகுதி நெற்றிப் பகுதியாகவும் மூன்றாவது பகுதி மூக்கு நுனியில் இருந்து கண் வரையும் பகுதியாகவும் நான்காவது பகுதி மூக்கு நுனியில் இருந்து தாடை நுனிப் பகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரிக்கப்பட்டு முதலில் தேவையற்ற பகுதிகள் வெட்டி அகற்றப்படும். முகமூடியினை செதுக்குவதற்கு பலவகையான உபகரணங்கள் பயன்படுத்துகின்றனர். அவையாவன நக உளி, எ உளி, தட்டை உளி, தட்டுக்கட்டை, அளவுகோலும், ஆரம்ப காலத்தில் கரித்துண்டும் தற்போது மார்க்கரும், கைவாள் போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உளி வகைகளை ஒரு வாரத்திற்கு புகையில் வைப்பார்கள். இதற்கு காரணம் பூச்சிகளினால் தாக்கம் ஏற்படாமல் இருக்கவும் நீர் தன்மையைப் போக்கவும் ஆகும். இம்முறை பழங்காலத்திலிருந்து இன்றுவரை நடைமுறையில் காணப்படுகின்ற பாரம்பரிய முறையாகும்.

முகமூடிகளில் சில பகுதிகளான தலைக்கிரீடம், காதுகள், தொங்கும் நாக்கு, நீண்ட பற்கள், அலங்கார கொடிகள், போன்ற பகுதிகள் தனித்தனியாக செய்து பின்னர் ஒன்றாக சேர்த்து பொருத்தப்படும் முறையும் காணப்படுகின்றன. செதுக்கப்பட்ட முகமூடிகளின் சொரசொரப்பு தன்மை நீக்குவதற்கு ஆரம்பகாலத்தில் திருக்கை மீனின் தோல்கள், ஆசனிப்பலா இலை, மொட்ட தெலிய, தொடகிம்புள்ள, சிம்பிடிமேனியா போன்ற மர இலைகளை பயன்படுத்தியுள்ளார்கள். தற்போது நவீனமான காலப்பகுதியில் சேன் பேப்பர் பயன்படுத்துகிறார்கள்.

இதன் பிற்பாடு செதுக்கப்பட்ட முகமூடிக்கு ஆரம்பகாலத்தில் இயற்கையாகவே பெறப்பட்ட வர்ணங்களையே பயன்படுத்தியுள்ளார்கள். வர்ணம் பூசுவதற்கு முன் வர்ணத்தை மரங்கள் உறிஞ்சி எடுக்காமல் இருப்பதற்காக வெள்ளை, மஞ்சள் வர்ணத்தை பூசுவார்கள். அதன் பிற்பாடுதான் உரிய இடங்களுக்கு உரிய வர்ணம் பூசுவார்கள். பளபளப்புத்தன்மை ஏற்படுவதற்கு பால்கள்ளி (கிரிபெட்டி), களி (மக்குளு) மண்ணினால் தயாரிக்கப்பட்ட கலவை பூசப்படும். பூசப்பட்ட வர்ணங்களைப் பாதுகாப்பாக "தோரண தேல்" என ஒரு வகையான திரவம் பூசப்பட்டது (Abuthakir, (2021) Informer, Age 65, Qatar)

.முகமூடிகளின் வகைகளுக்கு ஏற்ப வர்ணங்கள் பூசப்படுகின்றன. அரசர்களை சித்தரிக்கும் போது பயன்படுத்தப்படும் நிறங்கள் மற்றைய முகமூடிகளுக்கு பயன்படுத்தப்படமாட்டாது. அமைதியான முகங்களுக்கு மஞ்சள், வெள்ளை, கறுப்பு போன்ற நிறங்களும் பயங்கரமான முகங்களுக்கு விறவுண், கறுப்பு, வெள்ளை, மஞ்சள் போன்ற நிறங்களும், அரக்கன், பேய் போன்ற முகமூடிகளுக்கு கறுப்பு, சிவப்புபோன்ற வர்ணங்களையும் பயன்படுத்தியுள்ளார்கள். முகமூடிகளுக்கு வெண்ணிறமாகாக்கப்படும் முகத்தில் வேறு பல வகையான நிறங்களை பூசுவதற்கு இயற்கையாக முறையில் இருந்து வர்ணங்களை பெற்றுக்கொண்டனர. தூரிகைகளும் இயற்கையாக மூலப் பொருட்களைக் கொண்டே உருவாக்கியுள்ளார்கள்.

- சிவப்பு- சாதிலிங்கம், குருகல்.
- வெள்ளை- சுண்ணக்கல், மக்குளு (ஒரு வகையான களி).
- மஞ்சள் - கிரியேஸ், சிவன்குறு, சுண்ணக்கல்.
- ஊதா -போவிட்டியா, ரணவறு.
- கறுப்பு- சிரட்டைக்கரி, பலாப்பாலுடன் கெகுணு எண்ணெய், சேர்த்து துணியில் எரிப்பதன் மூலம் பெற்றுக் கொண்டனர்.
- பச்சை- வேப்பம் இலை, வாடப்ப இலை, மதகடிய இலை.
- நீலம் - அரிதாக காணப்படுகின்ற சிண்புகோ என்ற தாவர இலை, அவரை இலை.

போன்றவற்றிலிருந்து இயற்கையாகவே வர்ணங்களை தயாரித்துக் கொண்டனர். முகமூடிக்கு இந்த வர்ணங்களுடன் தொரண எனப்படும் எண்ணெய் கலந்து தான் பூசப்படும். வர்ணத்தை நீண்ட நாட்கள் பாதுகாப்பதற்காகவும் தோரணை எண்ணெயானது விளா மரத்தின் பிசினை கொண்டு தயாரிக்கப்பட்டது. தூரிகைகளுக்கு அணில் முடி, பூனை முடி, தும்பு என்பவற்றையும் பெரிய தூரிகைகளுக்கு வேரையும் கோடுகள் வரைய புல்லையும் பயன்படுத்தினர். முகமூடிகளை மேலும் அலங்கரிக்க கோழி இறகு, பன்றியின் கொம்பு, பல் என்பன பயன்படுத்தப்பட்டதுடன் மீசை, தாடிக்கு மிருகங்களின் உரோமங்கள் பயன்படுத்தப்பட்டன.

பழைய வகையான முகமூடிகள் அனைத்து தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தினால் அருங்காட்சியகங்களில் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டு காணப்படுகின்றன. 1800ம் ஆண்டு உருவாக்கப்பட்ட முகமூடிகளும் காணப்படுகின்றன. பல பிரதேசங்களிலும் அருங்காட்சியகங்கள் காணப்படுகின்றன. பல தொன்மை வாய்ந்த கலை, கைவினைப் பொருட்களும் காணப்படுவதோடு முகமூடிகளும் காணப்படுகின்றன.

முகமூடி தமது பாரம்பரியத்தை மற்றும் கலைத்திறமையினை வெளிப்படுத்தும் வகையில் பேணி பாதுகாக்கப்படுகின்றன. தனியாருக்கு சொந்தமான அருங்காட்சியகங்களும் காணப்படுகின்றன. அரியபாலா மற்றும் சன்ஸ் என்ற பெயரில் பிரபலமான குடும்பத்தினரால் 1987ம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன. கொழும்பு கடலோரத்தில் கேலமைன் கடலோரசாலையில் அம்பலாங்கொடை என்னும் இடத்தில் காணப்படுகின்றன. ஐந்து தலைமுறைகளில் முகமூடிகளும் காணப்படுகின்றன.

முகமூடி தயாரிக்கும் பட்டறையும் மற்றும் முகமூடியினை விற்பனை செய்யும் அறைகளுடன் காணப்படுகின்றன. ஒவ்வொரு பொருட்கள் பற்றிய சுருக்கமான விளக்கங்களுடன் பாரம்பரியம் மற்றும் பண்டைய இலங்கை முகமூடிகள் காணப்படுகின்றன. காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் விற்பனைக்கு வரும் அனைத்து முகமூடிகளும் மிகவும் சிக்கலான வடிவமைப்புக்களுடன் பொறுமையாக கையால் செதுக்கப்பட்டு துடிதுடிப்பான வர்ணங்களினால் வரையப்படுகின்றன. பழைய முகமூடிகளில் நுணுக்கமான வேறுபாடு மிகக் குறைவாகவும் தற்போதைய முகமூடிகளில் கூடுதலான நுணுக்கமான வேலைப்பாடுகளும் வர்ணத்தைப் பார்க்கும் போது ஆரம்ப காலத்தில் இயற்கை வர்ணங்களைப் பயன்படுத்தியதால் மென்மையான சாந்தமான உணர்வைக் காணலாம். தற்போது செயற்கை வர்ணத்தினால் பளிச்சிடும் கண்ணைக்கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. கூடுதலாக சுவர்களை அலங்கரிக்கவும் பரிசுப் பொருட்களாக கொடுக்கவும் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்படுகின்றன.

காலத்துக்கு ஏற்ற வகையில் முகமூடி மாற்றம் அடைந்து செல்கின்றது. முகமூடிகளின் படத்தை ஓவியமாக வரைந்து விற்பனை செய்யும் பழக்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பெரிய மாற்றமாக முகமூடியின் படத்தை பச்சை குத்தும் பழக்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் எழுத்து வடிவங்கள், அலங்கார வடிவங்கள், பறவைகள், விலங்குகளின் படங்கள் பச்சை குத்தலாக இடம்பெற்றன. தற்போது பச்சை குத்தலில் முகமூடிகளின் படங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டன. இதனால் கூடுதலாக சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டன. கூடுதலாக சுற்றுலாப்பயணிகள் பச்சை குத்துபவர்களாக காணப்படுகின்றனர். முகமூடிகளின் படங்களை பச்சை குத்துதல் ஒரு தொழிலாக நவீன காலத்தில் தொடங்கியுள்ளார்கள்.

இலங்கையில் பல பிரதேசங்களில் பலவகையான கலைஞர்கள் காணப்படுகிறார்கள். முகமூடி கலைஞர்களும் அதில் உள்ளடங்கப்படுகிறார்கள். முகமூடிகளை உருவாக்குவதில் கலைஞர்களாகவும் கைவினையாளர்களாகவும் பல பிரதேசங்களில் உள்ளார்கள். அதிலும் அம்பாலங்கொடை பிரதேசத்தில் சற்று கூடுதலாக உள்ளார்கள். பழமையான வடிவிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்தி புதிய வடிவில் முகமூடிகளை உருவாக்குபவர்களை கலைஞர்கள் எனவும் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட முகமூடிகள் போன்று பல பிரதி செய்பவர்களை கைவினையாளர்கள் எனவும் பிரித்துப்பார்க்கப்படுகிறார்கள். கூடுதலாக கைவினையாளர்களே காணப்படுகிறார்கள். கலைஞர்கள்

பரம்பரை பரம்பரையாக தமது குலத்தொழிலை செய்து வருவதோடு அதனை அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றனர்.

சில கலைஞர்கள் முகமூடி செய்யும் பட்டறைக்கு வெளி நபர்கள்செல்ல அனுமதிப்பதில்லை. அத்தோடு ஒரு முகமூடி எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதனையும் கூற மாட்டார்கள். காரணம் இக் கலையினை வேறு கலைஞர்களுக்கு சொல்லிக் கொடுக்கும் போது மற்றைய கலைஞர்கள் முகமூடி தொழிலை ஆரம்பித்தால் தமது தொழில் பாதிப்பு ஏற்படும் காரணத்தினால் வேறு கலைஞர்களுக்கு முகமூடி உருவாக்கம் தொடர்பான விடயங்களை கற்றுக் கொடுக்காது தமது பரம்பரைக்கு மாத்திரம் பரம்பரை பரம்பரையாக சொல்லிக்கொடுக்கின்றனர். அதிலும் சிறந்த கலைஞர்கள் கலைப்பொருளை பார்த்து பிரதி செய்யாது எந்த குருவிடமும் கலை பற்றிக் கற்றுக் கொள்ளாமல் சுயமான முகமூடி தொழிலில்ஈடுபடுபடுகின்றனர். காரணம் முகமூடி கலையானது வருமானத்தைஈட்டிக்கொடுக்கின்ற தொழிலாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றன.

முகமூடியானது நவீன தொழிநுட்பம் காரணமாக நெகிழி (plastic) வடிவிலும் வரத்தொடங்கிவிட்டது. இம்முறை ஒரு சில நிமிடங்களில் உருவாக்க முடியும். மரத்தினாலான முகமூடி ஏழு நாட்கள் தேவைப்படுகின்றன. அத்தோடு பேப்பர் மூலம் முகமூடிகள் உருவாக்கப்படுகின்றன. முகமூடிகள் இரண்டு நாட்களிலே உருவாக்குகின்றார்கள். எமக்கு தேவையான முகமூடி உருவத்தை களியில் உருவாக்கி அதன் பிற்பாடு சிறிய சிறிய துண்டுகளாக்கி பழைய பத்திரிகைகளை துண்டுகளாக எடுத்து கெமிபிக்ஸ் பசையுடன் ஒட்டப்படும். கனமாக ஒட்டிய பிற்பாடு முகமூடியை பிரித்து எடுத்து தமக்கு தேவையான படி வர்ணங்களைப் பூசுவார்கள். இவ்வாறான பல வகையான முகமூடிகள் உருவாக்கப்படுகின்றன. பைவர் மூலம் முகமூடிகள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான முகமூடிகள் விலையில் மிகக் குறைவாகக் காணப்படுவதால் கூடுதலான மக்கள் இவ்வகை முகமூடிகளை வாங்கிக் கொண்டுசெல்கின்றனர்.

முகமூடியானது இலங்கை மக்களின் பாரம்பரியமாகவும் அடையாளமாகவும் பார்க்கப்படுவதால் கலையானது மக்களாள் பேணிபாதுகாக்கப்படுகின்றன. மக்களோடு மக்களாக இணைந்த படி தமது இனத்தின் அடையாளங்களாகப் பாரம்பரியமான முகமூடி கலையானது வரலாற்றுச்சின்னமாக காணப்படுகின்றன.

## முடிவுரை

முகமூடி கலையானது மக்களின் வாழ்வாதார தொழிலாக காணப்படுகின்றன. கூடுதலான கலைஞர்கள் இக்கலையினைப் பரம்பரை பரம்பரையாக அடுத்த சந்ததியினருக்கு கடத்தப்படுகின்றார்கள். இதனால் இக்கலை வடிவமானது அழிந்து போகாமால் மக்களிடையே பின்னிப் பிணைந்து காணப்படும் என்பதில் ஐயமில்லை. கலை காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்து கொண்டு செல்கின்றன. இதன் பாரம்பரியமாக உருவாகின்ற முறையானது விடுபட்டு போகின்ற நிலையினாக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆரம்பத்தில் கருங்கற்களைக் கொண்டு முகமூடி செய்தார்கள். பிற்பாடு உளி வகைகளைக் கொண்டு செய்தார்கள். தற்போது இயந்திரங்கள் மூலம் முகமூடி உருவாக்கப்படுகின்றன. முகமூடிகளை உருவாக்க தேவைப்படும் நேரத்தினை இயந்திரங்களின் மூலம் குறைத்துவிடலாம். குறுகிய நேரத்தில் கூடுதலான முகமூடிகள் உருவாக்கப்படுகின்றமையினால் பாரம்பரியமான முகமூடிகளின் தன்மையினை நவீன காலத்தில் இழந்து கொண்டு செல்கிறோம். கிராமப்புறங்களில் மாத்திரம் கைகளினால் செதுக்கப்படுகின்ற முகமூடிகளைக் காணமுடியும். சில கலைஞர்கள் கைகளினால் செதுக்கப்படுகின்ற கலை வடிவங்களை தேடிச்சென்று வாங்குவதால்தான் இன்றும் பாரம்பரிய கலைவடிவமானது அழிவடையாமல் காணப்படுகின்றன. நவீன காலத்தில் உருவாக்கப்படுகின்ற முகமூடிகள் கண்களைக் கவரும் வகையில் பிரகாசமான வர்ணங்களை கொண்டு பயன்படுத்துகின்றார்கள். செயற்கையான வர்ணங்களை உருவாக்குவதால் இயற்கையில் பெற்றுக் கொள்கின்ற முறையானது விடுபட்டு செல்கின்றது. வருங்கால அடுத்த தலைமுறைக்கு இயற்கை முறைகளில் இருந்து வர்ணங்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற முறை தெரியாமல் போவதற்கு நவீன முறையில் செயற்கையில்

உருவாக்கப்படுகின்ற வர்ணங்களே காரணமாகும். செயற்கையான வர்ணங்களை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். இயற்கை வர்ணங்களை பெற்றுக் கொள்வதற்கு சில நாட்கள் தேவைப்படுவதால் மக்கள் செயற்கையை நோக்கி நாடிச் செல்கின்றமையினைக் காணலாம். செயற்கையான வர்ணங்கள் விலையானது மிகக் குறைவாகக் காணப்படுவதால் சில கலைஞர்கள் செயற்கையை நாடுகின்றார்கள். இயற்கையாக வர்ணத்தை உற்பத்தி செய்கின்றவர்களின் தொழிலானது மிகக் குறைவடைந்தமையினால் பல கலைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் காணப்படுகின்றார்கள். செயற்கையாக உருவாக்கப்படுகின்ற இடங்களில் கூடுதலாக இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றமையினால் சில கலைஞர்களுக்கு மாத்திரம் தொழில் வாய்ப்பு கிடைக்கின்றன. இயற்கையாக உருவாகின்ற முறையானது மருவிக் கொண்டு செல்கின்றன. இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால் பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டத்தில் இயற்கை வர்ணங்களை பெற்றுக்கொள்ளுதல் முறையினை அறிமுகம் செய்யும் போது தலைமுறை தலைமுறையாக இயற்கை முறையானது அழிவடையாமல் பாதுகாக்கப்படும். அருங்காட்சியகங்களில் பழைமையான கலைப்படைப்புக்களை பேணி பாதுகாக்கும் போது தமது அடையாளம் என்றும் அழிவடையாமல் நிலைத்து நிற்கும். முகமூடி கலை தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் எழுதி புத்தகவடிவிலும் ஆய்வரங்குகளிலும் இணையத்தளத்திலும் யூத்ரியூப் மூலம் போட்டிகள் நடாத்தும் போதும் பயிற்ச்சிப்பட்டறை நடத்துதல் மூலமும் பாரம்பரிய முகமூடிகளை உருவாக்குகின்ற போட்டிகள் நடாத்தும் போதும் பாரம்பரிய கலைஞர்களை கௌரவித்து வெளியுலகத்திற்கு அறிமுகம் செய்யும் போதும் இளம் கலைஞர்களின் மீது ஆர்வத்தை தூண்டுவதனால் கலைவடிவானது அழிவடையாமல் தமது பாரம்பரியம் பாதுகாக்கப்படுவதோடு தமக்கென்று ஒரு அடையாளமாக முகமூடி காணப்படும்.

## References


Hendry Julius, B., (2013) Naattupura Alakiyal Mugamoodigalin Nigalththuthal, Valaitamil

Vadivel Inbamohan (2019) Introduction of Fine Arts, Kumaran Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License